என்கிற செல்வம் ஆகியோர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் எங்களைப் போன்றவர்களையும் அழைத்து ஒரு விழாவை நடத்தினார்கள். அதற்குச் செல்ல இயலவில்லை. அந்த விழாவின் நோக்கமே சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்துதான். இருந்தாலும், அது குறித்த குறிப்புகளைப் பெற்று வனத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும். கும்பாபிஷேகம் நடந்து 33 வருடங்கள் ஆகியிருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 282, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

282—

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி

***7910—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 17 கிளைகள் மற்றும் 473 இணைப்புச் சங்கங்கள் மூலமாக திருப்பூர் மாவட்ட மக்களின் பயிர்க் கடன் மற்றும் இதர கடன் தேவைகள் செவ்வனே நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. திருப்பூர் மாவட்டம் தொழில் துறையில் வளர்ந்து வருவதாலும், மக்கள் தொகை மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து, மாநகராட்சி அந்தஸ்தைப் பெற்றுள்ள நிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்பேரில் கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் தலைமையில் மண்டல இணைப் பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்கள் அடங்கிய குழு ஒன்று

2018 ஜூலை 9]

அமைக்கப்பட்டு, திருப்பூர் மாவட்டத்தில் புதிதாக ஒரு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் துயில்கொள்கிற தங்கத் தலைவி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதை வாழ்க்கையின் இலட்சியமாகக் கடைப்பிடித்து வந்த எங்கள் அம்மா அவர்களின் நினைவிடத்தை நோக்கி முதற்கண் என் நெஞ்சார்ந்த நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்கிக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் செயல் திட்டங்களையெல்லாம் அம்மா அவர்களின் அரசு ஒரு துளியும் விட்டுக் கொடுக்காது என்று மக்களுக்குப் பறைசாற்றுகின்றவிதத்தில், அம்மா அவர்களின் நல்லாட்சியைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிற எங்கள் கொங்குநாட்டுத் தங்கம், சேலத்துச் சிங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும்,* (மேசையைத் தட்டும் ஒலி) *தென்பாண்டிச் சிங்கம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், திருப்பூர் தெற்கு தொகுதி மக்களின் சார்பாக என் நன்றிகலந்த வணக்கத்தினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.*

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்திலும்சரி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலத்திலும்சரி, திருப்பூருக்கு எண்ணற்ற திட்டங்களை அள்ளித் தந்திருக்கிறார்கள். ஆகவே, திருப்பூர் என்றென்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு எஃகுக் கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. நான்காவது குடிநீர்த் திட்டத்திற்காக 992 கோடி ரூபாயும், பாதாளச் சாக்கடை விரிவாக்கத் திட்டத்திற்காக 525 கோடி ரூபாயும் வாரி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பனியன் தொழில் மற்றும் பின்னலாடைத் தொழிலில் ஏற்பட்ட e–Way Bill பிரச்சினையைத் தீர்த்துக் கொடுத்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய திருப்பூர் மாவட்டத்திற்கு மத்தியக் கூட்டுறவு வங்கி வேண்டுமென்று கடந்த ஐந்து, ஆறு வருடங்களாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். தனி மாவட்டம் என்று பிரித்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 103 கோடி ரூபாய் ஒதுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைக் கட்டிக் கொடுத்து, ஒரு சிறந்த மாவட்டமாக, மாவட்டத்தினுடைய அதிகாரங்கள் அனைத்தையும் கொடுக்கிற ஒரு அமைப்பாக உருவாக்கினார்கள்.

அதற்குப் பிறகு, ஆவின் பாலகம், மத்தியக் கூட்டுறவு வங்கி, அச்சுக்கூடம், இதுபோன்ற அமைப்புகளெல்லாம் திருப்பூர் மாவட்டத்திற்குப் பிரித்து கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதால்தான் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே வைத்தேன். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைக் கண்டிப்பாக எங்களுக்குச் செய்துதர வேண்டுமென்கிற உத்தரவாதத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 283, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

283—

மின்மாற்றி

***13497—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—